**கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் - 2016**

---

கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 350,000 கிரயத்திலான கட்டிடம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுறவுச் சங்க கடன் தொடர்பாக பேணப்படும் செல்லப்படும் பொதுப் பேரேட்டில் கூட்டுறவுச் சங்க செயற்பாடற்ற கடன் மீதி ரூபா 23,027,137 ஆக இருந்ததுடன் அதற்கான தனியாள் கடன் பட்டோலையின் செயற்பாடற்ற மீதி ரூபா 47,255,334 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 24,228,139 ஆன வேறுபாடு தொடர்பாக குறித்த கடன் பதிவேடு சரிசெய்யப்படாமல் மீளாயவாண்டின் போது அவ்வேறுபாடு கடன் பேரேட்டிற்கும் திரண்ட நிதியத்திற்கும் சீராக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் கூட்டுறவுச் சங்க கடன் மற்றும் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. சீராக்கப்பட்ட செயற்பாடற்ற கடன் மீதி அடிப்படையில் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 6,057,071 ஆன ஐயக்கடன் ஒதுக்கீடு சீராக்கப்பட்ட காரணத்தினால் ஐயக்கடன் மீதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வரையறுக்கப்பட்ட சிறைச்சாலை திணைக்கள பல்நோக்கு சேமலாப நிதியத்தின் கூட்டுறவுச் சங்கத்தின் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 117,766 தொகையான பங்களிப்புத் தொகை வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் 2013 மறறும் 2014 ஆம் ஆண்டுகளிற்குரிய ரூபா 233,630 தொகையான பங்களிப்புத் தொகை ஒதுக்கீடு மீளாய்வாண்டின் போது இரண்டு முறை பதிவு செய்யப்பட்டிருந்தமையால் கிடைக்க வேண்டிய பங்களிப்புத் தொகை மற்றும் ரூபா 351,396 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுப் பேரேட்டின் பிரகாரம் கூட்டுறவுச் சங்கக் கடன் வட்டிக் கணக்கு மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட வட்டி பட்டோலைகளுக்கிடையே ரூபா 599,213 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்களிப்புத் தொகை பேரேடு மற்றும் பங்களிப்புத் தொகை பதிவேட்டிற்கிடையே 13 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறவேண்டிய பங்களிப்புத் தொகை மீதியில் ரூபா 206,095 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 19 ஆண்டுகளாக இருந்து வரும் ரூபா 2,666,000 தொகையான கூட்டுறவுக் கல்லூரிக் கடன், 08 ஆண்டுகளாக நிலவி வரும் ரூபா 1,999,600 தொகையான செயலாற்றல் முற்பணம் மற்றும் ரூபா 1,184,000 தொகையான நீதிமன்ற இழப்பீடு என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வ/ப கொபைஹேன பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 3,000,000 கடன் தொகையில் மீளாய்வாண்டின் போது எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மாதாந்த தவணை ரூபா 55,556 வீதம் 54 தவணைகளில் கடன் செலுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 2,983,090 மற்றும் நிலுவை வட்டியாக ரூபா 883,260 ஆக இருந்ததுடன், இத்தொகையை அறவிடுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 59 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 31,392,901 ஆன கடன் மீதி 15 ஆண்டுகளுக்கும் 53 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து அறவிடப்படாதிருந்ததுடன் அச்செயலற்ற கடன் மீதியிலிருந்து மீளாய்வாண்டின் போது ஒரு சங்கத்திடமிருந்து ரூபா 70,000 அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 36 சங்கங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 52,042,838 தொகையாக இருந்ததுடன் அதில் ரூபா 24,904,119 அதாவது 48 சதவீதம் வ/ப கல்வி சேவைகள் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து 2006 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியொன்றாக அவதானிக்கப்பட்டது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

---

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 188(2) | 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 300,000 கூட்டுத்தொகையான வைப்புச் செய்யப்பட்ட போதிலும், தீர்வையாகாத 02 காசோலைகள் தொடர்பாக 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை. | |
| (i) 4.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீடு தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கும் அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 4.2 ஆம் பந்தி | நிதியத்தின் வங்கிக் கணக்கும் புத்தகங்களும் முறையாக இணக்கம் செய்யப்பட்டு செயன்முன்னேற்றம் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டிற்குமான அறிக்கை அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 4.3 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான திரண்ட நிதியத்தின் மாற்றங்களைக் காட்டும் கூற்றொன்றை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

---

### 3.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 9,701,425 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 7,458,554 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,242,871 ஆல் அதிகரித்திருந்தது. ஏனைய செலவினம் ரூபா 7,528,624 ஆல் அதிகரித்திருந்த போதிலும், பங்களிப்புத் தொகை வருமானம் ரூபா 4,528,052 ஆலும் நானாவித வருமானம் ரூபா 3,390,254 ஆலும் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 1,548,403 ஆலும் அதிகரித்தமை மேற்குறித்த அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2014 ஆண்டில் பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் 2012, 2013, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது நிதி மிகையொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 21,962,534 தொகையான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டில் ரூபா 11,053,628 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 செயலாற்றல்

---

1974 சனவரி 10 ஆம் திகதிய 93/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவு விதிகளில் 43 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவு நிதியத்திலிருந்து பணத்தை செலவு செய்யக்கூடிய முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

- கூட்டுறவு கல்வி, விரிவாக்கல் மற்றும் பிரச்சார வேலைகள்.
- கூட்டுறவு சங்கங்களின் முகாமைத்துவ செயற்திறனை மேம்படுத்துதல்,
- கூட்டுறவு சங்கங்களுக்கு உதவியளித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் செயற்பணியாக கடன் / மானியம் வழங்கல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 வரை எவ்வித கடன் / மானியங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. கடன் அறவீட்டிற்காக பொருத்தமான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தாமையால் கடன் வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் பதிலாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தேசிய கூட்டுறவு சங்கங்கள், சங்கங்களின் மூலம் அறவிடப்பட வேண்டிய பங்களிப்புப் பணம் சேகரிப்பின் கீழ் 31 சங்கங்களிலிருந்து சேகரிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது 8 சங்கங்களிடமிருந்து ரூபா 4,869,469 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

2010, 2011, மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிலிருந்து வரும் ரூபா 141,522 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத 05 வங்கி வைப்புக்கள் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | பயன்பாட்டுப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படுவதில் தாமதம் காணப்படல். |
| (ஆ) | கடன் அறவீடு | கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடன் அறவிடுவதில் தாமதம் காணப்படல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை முறையாக இடம்பெறாமை |
| (இ) | பங்களிப்பு பணத்தை அறவிடல் | சங்க கணக்காய்வு மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பங்களிப்பு பணத்தை அறவிடுவதில் தாமதம் காணப்படல் |